# மாணவர்களுக்கு வழிகாட்டும் விஞ்ஞானிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, அக். 2:** ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து படித்து முன்னேறிய விஞ்ஞானிகளை வழிகாட்டிகளாக மாணவர்கள் ஏற்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் (இஸ்ரோ) பணியாற்றி சாதனை படைத்த மற்றும் படைத்துவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 9 பேருக்கு தமிழக அரசு சார்பில் சென்னையில் திங்கள்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் கடந்த ஆக. 23-ஆம் தேதி நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதன்மூலம் நிலவைத் தொட்ட நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது. இந்தச் சாதனையை சந்திரயான்-3 திட்ட இயக்குநரான தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரமுத்துவேல் செயல்படுத்திக் காட்டியுள்ளார்.

**அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள்:** தமிழக அரசின் பாராட்டுக்குரிய ஒன்பது விஞ்ஞானிகளில் ஆறு பேர் அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள் என்பது பெருமைக்குரியது. மிகவும் சாதாரணவர்களில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, படித்து முன்னேறியவர்கள். முதல் தலைமுறைப் பட்டதாரிகளாக இருந்து விஞ்ஞானிகளாக உயர்ந்தவர்கள்.



இந்திய விண்வெளி துறையில் சாதனை படைத்த தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு திங்கள்கிழமை தமிழக அரசு சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா ஆகியோருடன் பாராட்டுச் சான்றிதழ் பெற்ற விஞ்ஞானிகள் கே.சிவன், மயில்சாமி அண்ணாதுரை, வி.நாராயணன், ஏ.இராஜராஜன், எம்.சங்கரன், ஜெ. ஆசிர் பாக்கியராஜ், மு.வனிதா, நிகர் ஷாஜி, ப.வீரமுத்துவேல்.

## தமிழக விஞ்ஞானிகள் 9 பேருக்கு தலா ரூ.25 லட்சம்

'இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகிற தமிழக விஞ்ஞானிகளுக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.25 லட்சம் வழங்கப்படும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக விஞ்ஞானிகளுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் முதல்வர் பேசியதாவது:

இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.சிவன், சந்திரயான்-1 திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, திரவ உந்துசக்தி மைய இயக்குநர் வி.நாராயணன், ராக்கெட் ஏவுதலுக்கான அனுமதி அளிக்கும் வாரியத் தலைவர் விஞ்ஞானி ஏ.ராஜராஜன், யு.ஆர்.ராவ் விண்வெளி மைய இயக்குநராகப் பணியாற்றிய எம்.சங்கரன், விண்கல இயந்திரங்களின் உயர்சோதனைத் துறையில் பெரும் ஈடுபாடு கொண்ட விஞ்ஞானி ஆசீர் பாக்கியராஜ், இஸ்ரோவின் முதல் பெண் திட்ட இயக்குநரான விஞ்ஞானி எம்.வனிதா, 'சந்திரயான் 3' திட்ட இயக்குநர் வீரமுத்துவேல், ஆதித்யா எல்-1 திட்ட இயக்குநர் நிகர் ஷாஜி ஆகியோருக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.25 லட்சம் வழங்கப்படும் என்றார் அவர்.

அவர்களைத் தங்களது வழிகாட்டிகளாக மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட இளைய சமுதாயத்தினர் ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும்.

**அதிக விஞ்ஞானிகளே அரசின் இலக்கு:** மாணவர்கள் அனைவரும் அறிவியல் ஆர்வத்தையும், ஆளுமைத் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய மாணவர் சமுதாயத்திலிருந்து அதிக அளவில் அறிவியல் மேதைகள் உருவாக வேண்டும். அதுதான் திராவிட மாடல் அரசின் இலக்கு.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் அனைத்து அறிவியலாளர்களுக்கும் எனது பாராட்டுகள். அவர்களால்தான் அறிவியல் துறையில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கிறது.

நம்மைவிட அதிகமான தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்ற நாடுகளில் இருக்கலாம். ஆனால், அதிகமான தொழில்நுட்ப அறிவுக்கூர்மை கொண்டவர்கள் இந்தியாவில் உள்ளனர்.

பூமிக்கு அப்பால் உள்ள அனைத்து ஆராய்ச்சிகளும் தொய்வின்றித் தொடரட்டும். சூரியன், நிலவு ஆகியவற்றைப் பற்றி அனைத்து ஆய்வுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகள். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் வரை அனைத்து அறிவியல் முயற்சிகளும் வெற்றி பெறும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

விழாவில், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா வரவேற்றார். இஸ்ரோ விஞ்ஞானி வி.நாராயணன் ஏற்புரை ஆற்றினார்.

## 7.5% ஒதுக்கீடு: முதுநிலை பொறியியல் பயில்வோரின் கல்விச் செலவை அரசு ஏற்கும்

தமிழகத்தில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் இளநிலை பொறியியல் படித்து, அதன்பின்னர் முதுநிலை பொறியியல் படித்து வருவோரின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 7.5 சதவீத ஒதுக்கீட்டின் கீழ், இளநிலை பொறியியல் பட்டப் படிப்பு வழங்கப்படுகிறது. இவ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசு சார்பில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், இளநிலை பொறியியல் பட்டப் படிப்பை முடித்து முதுநிலை பொறியியல் படிப்பைத் தொடரும் 9 மாணவர்களுக்கு கல்வி, விடுதிக் கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே வழங்கும். இந்த கல்வி உதவித் தொகையை ஆண்டுதோறும் வழங்கும் வகையில், ரூ.10 கோடியில் தொகுப்பு நிதியம் உருவாக்கப்படும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

EVA STALIN

# பிகாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு தரவுகள் வெளியீடு

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 63%

**பாட்னா, அக். 2:** பிகாரில் மேற்கொள்ளப்பட்ட முதல் ஜாதிவாரி கணக்கெடுப்பின் தரவுகள் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட நிலையில், மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இபிசி) 63 சதவீதம் அங்கம் வகிப்பது தெரியவந்துள்ளது.

நாட்டின் சுதந்திரத்துக்கு முன்னதாக கடந்த 1931-ஆம் ஆண்டு இந்தியாவில் கடைசியாக ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் அடிப்படையிலேயே தற்போதும் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சுதந்திரத்துக்குப் பிறகு மக்களின் சராசரி ஆயுள் காலம் அதிகரித்துள்ளதால், மக்கள்தொகை விகிதத்தை அது பாதித்திருக்க வேண்டும். எனவே, சமூகத்தில் நலிந்த வகுப்பினரைக் கணக்கிட புதிய ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவைப்படுவதாக கோரிக்கைகள் எழுந்தன. ஆனால், பட்டியலின வகுப்பினரைத் தவிர மற்ற ஜாதிகள்வாரியாக கணக்கெடுப்பு நடத்த முடியாது என்று மத்திய பாஜக அரசு தெளிவுபடுத்தியது.

இதையடுத்து, பிகாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த அமைச்சரவை கடந்த ஆண்டு ஜூனில் ஒப்புதல் அளித்தது. பல்வேறு வழக்குகள் காரணமாக ஜனவரியில்தான் கணக்கெடுப்புப் பணிகள் தொடங்கி நடைபெற்று வந்தன.



ஜாதிவாரி கணக்கெடுப்பு முடிந்து அதன் தரவுகள் தொகுக்கப்பட்டு வந்த நிலையில், அந்தப் புள்ளிவிவரங்களை வெளியிடத் தடைவிதிக்கக் கோரி பாட்னா உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்றம், ஜாதிவாரி கணக்கெடுப்புக்குத் தடை விதிக்க மறுத்து தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என உச்சநீதிமன்றம் ஆகஸ்டில் தெரிவித்தது.

இந்நிலையில், ஜாதிவாரி கணக்கெடுப்பின் தரவுகளை அந்த மாநில வளர்ச்சித் துறை ஆணையர் விவேக் சிங் திங்கள்கிழமை வெளியிட்டார்.

அதன்படி, மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையான 13.07 கோடி பேர் 215 சமூகங்களாகப் பிரிக்கப்பட்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கணக்கெடுப்பு தரவுகளின்படி, பிகாரில் அதிகபட்சமாக மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இபிசி) 36 சதவீதமும், அடுத்தபடியாக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி) 27.13 சதவீதமும், பட்டியலின வகுப்பினர் (எஸ்.சி.) 19.65 சதவீதமும், பொது வகுப்பினர் (ஜெனரல்) 15.52 சதவீதமும், பழங்குடி வகுப்பினர் (எஸ்டி.) 1.68 சதவீதமும் இருப்பது தெரியவந்துள்ளது.

மாநில மக்கள்தொகையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான யாதவர் சமூகத்தினர் அதிகபட்சமாக 14.27 சதவீதம் அங்கம் வகிக்கின்றனர்.

மதம் வாரியாக மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக 81.99 சதவீதம் பங்கு வகிக்கின்றனர். அடுத்தபடியாக இஸ்லாமியர்கள் 17.70 சதவீதம் பேர் உள்ளனர். சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், ஜெயின், பிற மதத்தினர், மத நம்பிக்கையற்றவர்கள் உள்ளிட்டோர் ஒரு சதவீதத்துக்கும் குறைவாக உள்ளனர்.

**முதல்வர் நிதீஷ் பாராட்டு:** ஜாதிவாரி கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்ட பிகார் அரசு அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்து மாநில முதல்வர் நிதீஷ்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார். மேலும், தேர்தல் ஆணையத்தின் முன்னிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடுசெய்து கட்சித் தலைவர்களுக்கு இந்தத் தகவல்கள் முழுமையாகப் பகிரப்படும் என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'மத்தியில் நாம் அடுத்த ஆட்சி அமைக்கும்போது, நாடு தழுவிய ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த பிகார் ஜாதிவாரி கணக்கெடுப்பு முன்னுதாரணமாகத் திகழும்' என துணை முதல்வர் தேஜஸ்வி யாதவின் தந்தையும், ராஷ்டிரிய ஜனதா தள தலைவருமான லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

### அதிகபட்ச மக்கள்தொகை கொண்ட 10 ஜாதிகள்

| ஜாதி | சதவீதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| யாதவர் | 14.27 | 1.86 கோடி |
| துஸாத் | 5.31 | 69.43 லட்சம் |
| சமார் | 5.25 | 68.69 லட்சம் |
| கொய்ரி | 4.2 | 55.06 லட்சம் |
| முஸஹர் | 3.08 | 40.35 லட்சம் |
| பிராமணர் | 3.65 | 47.81 லட்சம் |
| ராஜ்புத் | 3.45 | 45.10 லட்சம் |
| குர்மி | 2.87 | 37.62 லட்சம் |
| பனியா | 2.3 | 30.26 லட்சம் |
| காயஸ்த் | 0.60 | 7.86 லட்சம் |

EVA STALIN I



**மருத்துவம்**

# அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு



## 'எம்ஆர்என்ஏ' கரோனா தடுப்பூசி உருவாக்க உதவியவர்கள்

**ஸ்டாக்ஹோம், அக்.2:** கரோனா பாதிப்புக்கு எதிராக திறன்மிக்க 'எம்ஆர்என்ஏ' தடுப்பூசியை உருவாக்க உதவிய பேராசிரியர் கேத்தலின் கரிக்கோ மற்றும் அவருடன் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ட்ரூ வைஸ்மன் ஆகிய இருவர் இவ்வாண்டின் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் முக்கியப் பங்களிப்பை ஆற்றியவர்களுக்கும் அமைதிக்காக பாடுபட்டவர்களுக்கும் ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் இந்திய மதிப்பில் ரூ.8.32 கோடி (10 லட்சம் டாலர்) ஆகியவை பரிசாக வழங்கப்படுகின்றன.

நிகழாண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு குறித்த அறிவிப்பை நோபல் அமைப்பின் செயலர் தாமஸ் பெர்ஸ்மான் திங்கள்கிழமை வெளியிட்டார்.

அதன்படி, பேராசிரியர் கேத்தலின் கரிக்கோ மற்றும் அவருடன் இணைந்து 'எம்ஆர்என்ஏ' புரத ஆராய்ச்சி மேற்கொண்ட ட்ரூ வைஸ்மேன் ஆகிய இருவரும் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நோபல் பரிசு தேர்வுக் குழு வெளியிட்ட அறிவிப்பில், 'அண்மைக் காலத்தில் மனித நலனுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் உருவான நேரத்தில், இதுவரை இல்லாத வகையில் திறன்மிக்க தடுப்பூசியை உருவாக்க இவர்கள் இருவரும் உதவினர். அதாவது, நமது நோய் எதிர்ப்புத் திறனை ஊக்குவிப்பதில் 'எம்ஆர்என்ஏ' எந்த அளவுக்கு செயல்படும் என்ற அடிப்படைப் புரிதல் இவர்களுடைய ஆராய்ச்சி மூலமாக கிடைத்தது. அதன் அடிப்படையில், அவர்கள் 2023-ஆம் ஆண்டுக்கான உடலியல் மற்றும் மருத்துவத்துக்கான நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்' என்று குறிப்பிட்டுள்ளது.

மருத்துவத்துக்காக நோபல் பரிசு பெறும் 13-ஆவது பெண் கேத்தலின் கரிக்கோ என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசுத் தொகை இருவருக்கும் சமமாகப் பிரித்து வழங்கப்படும்.

அடுத்ததாக, இயற்பியலுக்கான நோபல் பரிசு செவ்வாய்க்கிழமையும் (அக்.3), தொடர்ந்து வேதியியல், இலக்கியத் துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கான நோபல் பரிசுகள் அடுத்தடுத்த நாள்களிலும் அறிவிக்கப்படவுள்ளன.

### கேத்தலின் கரிக்கோ (68)



ஹங்கேரியில் பிறந்த கேத்தலின் கரிக்கோ (68) அந்நாட்டிலேயே உயர்கல்வியைப் பூர்த்தி செய்த பிறகு தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ள அமெரிக்காவுக்கு வந்தார். அமெரிக்காவில் பல்கலைக்கழக பேராசிரியராகப் பணியாற்றிய கேத்தலின் தற்போது பயோஎன்டெக் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் துணைத் தலைவராக உள்ளார்.

### ட்ரூ வைஸ்மன் (64)



அமெரிக்கரான ட்ரூ வைஸ்மன் (64), பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் ஆர்என்ஏ புரத ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 1901-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வரும் நோபல் பரிசை நிறுவியவர் ஸ்வீடனைச் சேர்ந்த ஆல்பிரட் நோபல். வேதியியல், பொறியியலில் நிபுணரான இவர், டைனமைட் வெடிபொருளைக் கண்டுபிடித்தார். தனது கண்டுபிடிப்பின் மூலம் பெரும் செல்வந்தரான இவர் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் நோபல் பரிசை நிறுவினார். அவரது நினைவுதினமான டிசம்பர் 10-ஆம் தேதி பரிசு வழங்கப்படும்.

EVA STALIN IAS

# அமைதியைத் தடுப்பது எது?

நான்கு மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இணைய சேவை கடந்த மாதம் 23-ஆம் தேதி மீண்டும் செயல்படத் தொடங்கியபோது, மணிப்பூரில் அமைதி திரும்பிவிட்டது என்று நினைத்தால், ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. அமைதி திரும்பிவிடக் கூடாது என்பதில் சிலர் முனைப்புடன் இருப்பதுதான், கலவரம் பழையதுபோல அதிகரித்திருப்பதற்குக் காரணம்.

ஜூலை மாதத்தில் மைதேயி இனத்தைச் சேர்ந்த மாணவனும் மாணவியும் காணாமல் போனார்கள். காதலர்களான அவர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குகி இனத்தவர்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கூறி, கொலை செய்யப்பட்ட அவர்களின் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பரவியது. சற்று அடங்கியிருந்த கலவரம் மீண்டும் பற்றி எரியத் தொடங்கியதற்கு அதுதான் காரணம்.

அந்த சம்பவத்தைக் கண்டித்து, பள்ளி, கல்லூரி மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்திருக்கிறது. மேற்கு இம்பாலில் உள்ள காவல்துறை துணை ஆணையர் அலுவலகம் போராட்டக்காரர்களால் சூறையாடப்பட்டிருக்கிறது. மணிப்பூர் தலைநகர் இம்பாலில் பல இடங்களில் மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் நீடிக்கிறது.

இதற்கு முன்பும் இதேபோல, குகி சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, மைதேயி இனத்தைச் சேர்ந்த கும்பலால் மே மாதம் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தின் காணொலி, இரண்டு மாதங்களுக்குப் பிறகு சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டு, கலவரத்துக்கு நெய் வார்க்கப்பட்டது. மணிப்பூரில் பெண்கள் போராட்டத்தை முன்னெடுப்பதும், பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாவதும் நீண்ட நாள்களாக வழக்கமாகவே இருந்து வருகிறது.

அக்டோபர் மாதம் தொடங்கி, அடுத்த ஆறு மாதங்களுக்கு மணிப்பூரின் பலப் பகுதிகள் ராணுவப் படையின் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மொத்த மாநிலத்திலும் அந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டாலும், இம்பால் பள்ளத்தாக்கில் உள்ள 19 காவல் நிலைய எல்லைகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மைதேயிகள் அதிகமாக வாழும் இம்பால் பள்ளத்தாக்கு மட்டும் ஏன் விதிவிலக்காக்கப்பட்டிருக்கிறது என்பது புதிராக இருக்கிறது. நிலைமையின் தீவிரம் கருதி அந்தச் சட்டத்தை பயன்படுத்துவதில் தவறு காண முடியாவிட்டாலும், அதிகமான போராட்டங்களையும், வன்முறைகளையும் சந்திக்கும் பகுதிகள் தவிர்க்கப்பட்டிருப்பது, குகி இனத்தவரின் ஆத்திரத்தை அதிகரிக்கக் கூடும்.

மணிப்பூர் கலவரத்தின் பின்னணியில், அண்டை நாடான மியான்மரில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரும் பெரும் பங்கு வகிக்கிறது. நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர் எல்லைகளையொட்டிய மியான்மரில் சகேய்ங், சின் மாவட்டங்களில், தேசிய ஐக்கிய அரசின் போராளிகளுக்கு எதிராக மியான்மர் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அந்தப் பகுதிகள் மியான்மர் ராணுவ ஆட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை என்பதால், தொடர்ந்து விமான குண்டு வீச்சுகளும், கிராமங்களுக்குத் தீ வைத்தலும் அங்கிருக்கும் மக்களைத் தப்பியோட வைத்திருக்கிறது.

தேசிய ஐக்கிய அரசின் தலைவர்கள் உள்பட ஏறத்தாழ 60,000 சின், குகி, ஜோமி பழங்குடியினர் அகதிகளாக மிசோரம், மணிப்பூர் மலைப்பகுதிகளைத் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கட்டுப்பாடில்லாமல் எல்லை கடந்து பயணிக்க முடியும் என்பதால், ஆயுதங்கள், போதை மருந்துகள் போன்றவை மணிப்பூருக்குள் மியான்மர் அகதிகளால் கடத்தப்படுகின்றன.

அதிகாரபூர்வமாக இதுவரை 180 பேர் இறந்திருக்கிறார்கள் என்றும், சுமார் 50,000 பேர் தங்கள் வீடு வாசல்களை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால், உண்மையான நிலவரம் என்ன என்பது குறித்து யாருக்கும் வெளியில் தெரியாது.

மணிப்பூரில் நிலைமை கட்டுப்படுத்தப்படாமல், கலவர பூமியாகத் தொடரும் அதே வேளையில், நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது கடந்த மாதம் பூடான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 16 வயதுக்கு உட்பட்டவர்களின் கால்பந்தாட்ட போட்டி. வெறும் விளையாட்டுதானே என்று அந்தக் கால்பந்தாட்ட போட்டியை நாம் புறந்தள்ளிவிட முடியாது.

திம்புவில் நடந்த 'சாஃப்' விளையாட்டுகளின் 16 வயதுக்குட்பட்டவர்களின் கால்பந்தாட்ட போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது. கடந்த ஐந்து மாதங்களாகத் தொடரும் கலவரம் மணிப்பூரில் அடங்கியபாடில்லை என்றாலும், 23 வீரர்களைக் கொண்ட அந்த இந்திய கால்பந்தாட்ட அணியில் 16 பேர் கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மணிப்பூரைச் சேர்ந்தவர்கள்.

அந்த 16 பேரில் 11 பேர் மைதேயிகள், 4 பேர் குகி இனத்தைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் மணிப்பூரி முஸ்லிமான மைதேயி பங்கள் கால்பந்தாட்ட மைதானத்தில் உருளும் பந்தில், ரசிகர்களின் சுவாசம் நிரப்பப்பட்டிருக்கும் என்று சொல்வார்கள். சுவாசம் மட்டுமல்ல, சகோதரத்துவமும், அதில் நிறைந்திருக்கும் என்பதை உணர்த்தியது இந்திய அணியின் விளையாட்டு. பூடான் தலைநகர் திம்புவிலுள்ள கால்பந்தாட்ட மைதானத்தில் நட்புறவுடனும், ஒற்றுமையுடனும் விளையாடிய அந்த மணிப்பூர் மாணவர்கள், தங்கள் சொந்த மாநிலமான மணிப்பூரிலும் அதேபோல ஒற்றுமையாக வாழ வேண்டும். இந்தச் செய்தியை மணிப்பூரில் விளம்பரப்படுத்த இந்திய அரசு ஏன் தயங்குகிறது என்று புரியவில்லை!

மணிப்பூரில் நடப்பது கலவரம் அல்ல, அரசியல்!

ACADEMY

# தியாகத்தின் திருவுருவம்

**சீனி. விசுவநாதன்**

வத்தலகுண்டு ராஜம் ஐயருக்கும், நாகலட்சுமி அம்மைக்கும் 4-10-1884 அன்று பிறந்தவர் சுப்பிரமணிய சிவா. நாட்டுக்காக- மொழிக்காக அவர் பட்ட துன்பங்கள் எண்ணிலடங்கா.

சொல்லப்போனால், சிவா ஓர் இயக்கமாகவே செயல்பட்டவர்; மிகச்சிறந்த பேச்சாளர்; 'ஞானபாநு', 'பிரபஞ்சமித்திரன்', 'இந்தியதேசாந்திரி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்; உரிமையாளர்; ஆன்மிகப் பற்றுமிக்கவர்; இத்தனைக்கும் மேலாக அவர் 'நளினசுந்தரி அல்லது நாகரிகத்தடபுடல்' என்ற நாவலையும் எழுதியுள்ளார்.

பாரதியின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்க சிவா எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்பல ஆகும். பாரதியின் தேசியப் பாடல்களைத் தெருத்தெருவாகப் பாடிச்செல்லும் பஜனைக்குழு ஒன்றையும் சிவா ஏற்படுத்தினார். தாமும் பஜனைக் குழுவுடன் சேர்ந்து, பாரதியின் பாடல்களைப் பாடி தேசிய இயக்கத்தை வலுப்படுத்த உழைத்தார்.

இந்தநிலையில், தம்முடைய திட்டமான பாரதமாதா கோவிலுக்கான நிதியைத் திரட்டவும்சிவா முற்பட்டார். சிவா சுதந்திரதேவியை தரிசனம் செய்யவேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டு விளங்கினார். தமது மாசுமருவற்ற தூய உள்ளத்தை 'எனதுபிரார்த்தனை' என்கிற அகவற்பாவில் திறந்து காட்டியுள்ளார்.

இந்தப் பாடல் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க.வெளியிட்ட 'தேசபக்தன்' இதழில் 1918 ஜனவரியில் பிரசுரமாகிஉள்ளது. இந்தப் பாடலின் ஒவ்வொரு வரியும் சிவாவின் எண்ணத்தை எதிரொலிக்கின்றது. நோய் தம்மை அணு அணுவாகத் தின்ற நிலையிலும், நம்நாட்டு மக்கள் ஏற்றம்அடைந்து, சொந்தநாட்டில் சுகமாய்வாழ 'பிரார்த்தனை' செய்த தியாகச் செம்மல்சிவா.

1916-ஆம் ஆண்டுமுதல் 1919-ஆம் ஆண்டுவரை சிவா தமது கவனத்தை நூல்களை எழுதுவதில் செலுத்தினார். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். எழுத்துலகப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே, திருவல்லிக்கேணி கடற்கரையில் சொற்பொழிவுகள்செய்ததும்உண்டு.

சிவா தம்முடைய அரசியல் தலைவராக திலகரையே ஏற்றுக்கொண்டார். தம் குருபக்திக்குச் சான்றாக, கடற்கரையில் சொற்பொழிவு நிகழும் இடத்திற்கு'திலகர் கட்டம்' என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

1920-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போதும், மதுரையில் நடைபெற்ற ஹார்வி மில் தொழிலாளர் வேலைநிறுத்த நேரத்திலும் சிவா ஆற்றிய சேவை அளப்பரியது. இதே 1920-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக்கு பிரதிநிதியாகச் சிவா சென்றதும் குறிப்பிடத்தக்கது.

1921-ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று சிவா சந்நியாசியைப் போன்று காஷாய உடையைத் தரித்துக்கொண்டார். அதே நாளில், 'பாரதஆசிரமம்' என்ற பெயரால் ஸ்தாபனம் ஒன்றையும் நிறுவினார்.

பாரதமாதாவுக்குக் கோயில் ஒன்று கட்டவும் சிவா திட்டமிட்டார். தமக்கு 'ஸ்வதந்திரானந்தர்' என்ற பெயரையும் சூட்டிக் கொண்டார். சில நாட்களில் நோய்வாய்ப்பட்டார். நோயினால் சிவா படும் துன்பங்களைக் கண்டு வ.வெ.சு. ஐயரின் உள்ளம் பதைபதைத்தது. அதனால், அவருக்கு உதவி செய்வதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

பாரதியாரும் பாரதமாதாவுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்பதிலே மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் தமது ஆசையை 'இந்தியா' வார இதழில் 'கிராமந்தோறும் பாரதமாதா கோயில்' என்று எழுதிப் புலப்படுத்திஉள்ளார்.

1922-ஆம் ஆண்டு தர்மபுரி, கோவை, பாப்பாரப்பட்டி முதலிய ஊர்களில் சிவா சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பாரதமாதா கோயிலைக் கட்ட, தீவிரமாக உழைத்தார்.

இந்த நிலையில், பாப்பாரப்பட்டி சின்னமுத்து என்பார் சிவாவை பாப்பாரப்பட்டிக்கே வந்துவிடுமாறு கேட்டுக்கொண்டார். அவரின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க சிவா பாப்பாரப்பட்டிக்கே திரும்பினார். அந்த ஊரிலேயே பாரதமாதா கோயிலுக்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தாமும் அங்கேயே தங்கிவிடுவதென்று தீர்மானித்துக் கொண்டார்.

பாப்பாரப்பட்டிக்கு வந்துசேர்ந்தவுடன் ஊர்மக்களின் உதவிகொண்டு, நிலம் வாங்கிஅதற்கு 'பாரதபுரம்' என்ற பெயரையும் சூட்டினார். பின்னர் தேசபந்து சித்தரஞ்சன் தாஸைக் கொண்டு பாரதமாதா கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டச்செய்தார்.

தாம்மேற்கொண்ட பாரதமாதா கோயில் பற்றிப் பல ஊர்களிலும் பேசினார். இதை பிரிட்டிஷ் அரசு விரும்பவில்லை. எனவே, இவரைச் செயலற்றவராக்க முடிவுசெய்தது. அதனால், சிவாவுக்குற்ற நோயைக் காரணம் காட்டி, இவரைரயிலில் பிரயாணம் செய்யத் தடைவிதித்தது.

ஆனால், தடைஉத்தரவைக் கண்டு சிவா மனம் கலங்கவில்லை. கட்டைவண்டிகளில் பிரயாணம் செய்தும், கால்நடையாக ஊர் ஊராகச் சென்றும் தம் தேசிய பிரசாரத்தைத் தொடர்ந்தார்.

இதன் காரணமாக, சிவாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. தம் உடல்நிலையைப் பற்றிக் கவலைப்படாமல், தேசத்தைப் பற்றியே கவலைகொண்டு, கும்பகோணம், மாயவரம், சிதம்பரம் முதலிய ஊர்களிலே தங்கிப் பின்னர், வேலூர், குடியாத்தம் மார்க்கமாகச் சென்னை வந்து சேர்ந்தார்.

சிவா சென்னையில் தங்கியிருந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரையில் 'பாரதமாதா கோயில் மற்றும் ஆசிரமம்' விஷயமாகப் பேசிய சொற்பொழிவுகளுக்காக அரசு வழக்குத் தொடுத்தது.

இவ்வழக்கில் சிவா தாமே வழக்காடினார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிவா செய்த சாதனைகள்பற்பல. அவற்றுள்ஒன்று பாரதிக்கு நினைவு நாள் கூட்டத்தை நடத்தியதாகும்.

தமிழ்த்தாயின் தவப்புதல்வராகவும், பாரததேவியின் திருத்தொண்டராகவும் திகழ்ந்தசிவா 23-7-1925 வியாழக்கிழமை காலை 5:00 மணிஅளவில், தமது 41-ஆவது வயதில் பூத உடலை நீத்துப் புகழுடல் பெற்றார். ஞான தீரராக வாழ்ந்து, பாரதிய மதம் கண்ட சுப்பிரமணிய சிவாவின் பெயர் என்றென்றும் தமிழக மக்களின் நெஞ்சில் ஒளிர்ந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**நாளை (அக். 4)**
**தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்தநாள்.**

கட்டுரையாளர்:
**பாரதியியல் ஆய்வாளர்.**

# மங்கையராகப் பிறப்பதற்கே...


தி.இராசகோபாலன்

**ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு மன்னர்கள் வீரமரணம் அடைந்த நேரத்தில், வாளேந்தி போரிட்டு வீரமரணம் அடைந்த பேறு மாதர் குலத்திற்கு உண்டு. ராணி மங்கம்மாள், வேலு நாச்சியார், ராணி லட்சுமி தேவி என மண்ணின் மானங்காத்த வீராங்கனைகள் பலர்.**

[illegible]

# தன்னிறைவு கிராமங்களை உருவாக்குவோம்

**சென்னை, அக். 2:** தமிழ்நாட்டில் தன்னிறைவு மற்றும் சமூக வளர்ச்சி பெற்ற கிராமங்களை உருவாக்க உழைப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

காந்தி ஜெயந்தியையொட்டி, தமிழகம் முழுவதும் ஊராட்சிகளில் திங்கள்கிழமை நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தை காணொலி மூலம் தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகுதான் கிராம சபைக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுகின்றன. கிராமப்புற மக்களின் குரல் எப்போதும், எந்தச் சூழலிலும் தடையில்லாமல் ஒலிக்கவேண்டும்என்பதற்காகவே கிராம சபைக் கூட்டங்களை ஆண்டுக்கு ஆறு முறை தடையில்லாமல் நடத்துகிறோம்.

**முக்கியப் பாலமாக...:** ஓர் அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு அதிகாரம் வழங்க வேண்டும். நிதி ஆதாரங்களையும் உருவாக்க வேண்டும். அந்த வகையில், கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கிராம சபைகள் நலிந்தோருக்கும், வறியோருக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள், முதியோர் நலன், குழந்தைகள் நலன் ஆகியவற்றில் அதீத ஈடுபாடு காண்பிக்க வேண்டும். கல்விக்காக அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் கிராம சபைகள் முக்கியப் பாலமாக இருக்க வேண்டும். தமிழக அரசின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், பள்ளி உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்த கிராம சபைகள் உதவி செய்ய வேண்டும்.

**கருத்துப் பரிமாற்றக் களம்:** கிராம சபையை ஓர் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றக் களமாக மாற்ற வேண்டும். ஊராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான கருத்துகளை மட்டுமே கிராம சபைகள் விவாதிக்க வேண்டும். அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மகளிர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக அளவில் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். கிராம சபையில் அவர்களின் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்



தமிழகம் முழுவதும் திங்கள்கிழமை நடைபெற்ற கிராம சபை கூட்டங்களை, தனது முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் தொடங்கிவைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தேர்வு செய்யப்படும் பணிகள் பொதுவானதாகவும், அனைவரும் பயன்பெறும் வகையிலும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கிராம சபை கூட்டம் தொடர்பான பதிவேடுகளைப் பராமரித்து, அனைவரின் கருத்துகளையும் பதிவு செய்ய வேண்டும்.

**சிறப்புக் கவனம்:** நீராதாரங்களை வளப்படுத்துவது, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைப்பது போன்றவற்றில் ஆக்கபூர்வமான பணிகளை உறுதிப்படுத்த வேண்டும். மகளிருக்குக் கட்டணமில்லாத பேருந்துப் பயணம், பெண்களுக்கு தலா ரூ.1,000 போன்ற திட்டங்கள் அவர்களது முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

கிராமங்கள், கிராம மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் திமுக அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. அனைத்துத் துறைகளும், அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும். இதுவே அரசின் இலக்கு. நகர்ப்புறங்கள் மட்டுமே வளர்ந்தால் போதாது. கிராமப்புறங்களும் வளர வேண்டும்.

**தற்சார்பை நோக்கி:** ஒரு மாநிலத்தின் வளர்ச்சி சமுதாயத்தின் வளர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அதைச் செயல்படுத்திக் காட்ட வேண்டுமென்றால், கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி அடைய வேண்டும். இதை மனதில் வைத்துத்தான் அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

கிராமங்கள் தற்சார்பு நிலையை அடைய வேண்டுமென மகாத்மா காந்தி விரும்பினார். தற்சார்புள்ள, தன்னிறைவு பெற்ற, அனைத்து வசதிகளையும் கொண்ட சமூக வளர்ச்சி பெற்ற கிராமங்களை உருவாக்கவே திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைத்து வருகிறது என்றார் அவர்.

# சந்திரயான்-3 லேண்டர், ரோவர் மீண்டும் இயங்குமா?

## திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் தகவல்

**சென்னை, அக். 2:** நிலவில் சூரிய ஒளியின் அளவு மிகக் குறைவாகவே இருப்பதால், தொடர்ந்து 'சந்திரயான்-3' விண்கலத்தில் உள்ள லேண்டர், ரோவர் கருவிகளைச் செயல்பட வைப்பது சந்தேகமே என்று திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் தெரிவித்தார்.

ஆனாலும் நிலவு பற்றிய ஆய்வுகளுக்குத் தேவையான முக்கியத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

தமிழக அரசு சார்பில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஒன்பது பேருக்கு பாராட்டுத் தெரிவிக்கும் விழா சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் செய்தியாளர்களிடம் கூறியது: நிலவில் மென்மையாகத் தரையிறங்கும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற பெருமை கிடைத்துள்ளது.

ரோவரை 100 மீ. தொலைவுக்கு நகர்த்தியுள்ளோம். தென் துருவப் பகுதியில் இருந்து நிலவு தொடர்பான ஏராளமான தகவல்கள் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை நிலவைப் பற்றிய எதிர்கால ஆய்வுத் திட்டங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். நாம் எந்த நோக்கத்துக்காக 'சந்திரயான் 3' திட்டத்தைச் செயல்படுத்தினோமோ அது முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சந்திரயான்-3 திட்டத்தின் ஆயுட்காலம் என்பது ஒரு முழு நிலவு நாள்தான் (அதாவது தோராயமாக பூமியின் 14 நாள்களுக்குச் சமம்). அதற்கு மேல் அதிலுள்ள கருவிகளை இயக்குவதற்கான சக்தி இல்லை.

அப்படி இயக்க வேண்டுமெனில் நமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு சூரிய ஒளி மின்சக்திதான். இந்த மின்சக்தியைப் பொருத்தே திட்டத்தின் ஆயுட்கால அளவு உள்ளது. ஆனால், போதிய அளவுக்கு வெப்பம் கிடைத்தால்தான் சூரியஒளி மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும்.

நிலவுப் பகுதியில் வெப்பம் மிகக் குறைவாகவே இருக்கும். அதாவது மைனஸ் 150 டிகிரி செல்சியஸ் முதல் மைனஸ் 175 செல்சியஸ் வரை வெப்ப நிலை அளவு இருக்கும்.



எனவே, இந்த அளவு வெப்பத்தை வைத்து சூரியஒளி மின்சக்தியால் கருவிகளின் இயக்குவது என்பது கேள்விக்குறியாகும். இதனால் தொடர்ந்து லேண்டர் மற்றும் ரோவர் கருவிகளைச் செயல்பட வைப்பது சந்தேகம்தான் என்றார் அவர்.

**விடாமுயற்சி முக்கியம்:** முன்னதாக, விழாவில் விஞ்ஞானி வீரமுத்துவேல் பேசுகையில், நானும் அரசுப் பள்ளியில்தான் படித்தேன். எந்தப் பள்ளியில் படிக்கிறோம் என்பது முக்கியமில்லை. படிக்கும்போதே செயல்முறை சார்ந்த அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

புரிந்து படிப்பது முக்கியம். புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். நம் முன் ஏராளமான வாய்ப்புகளும் தொழில்நுட்பங்களும் உள்ளன. தோல்வியைப் பார்த்து அஞ்சக் கூடாது. முயற்சியும் கடின உழைப்பும் விடாமுயற்சியும் அவசியம்.

தோல்வியில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இதைத்தான் 'சந்திரயான் 3'-திட்டத்தில் பயன்படுத்தினோம். கல்லூரியில் இருந்து வெளியே வந்தவுடன் ஒரு குழுவில் பணியாற்றும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்தப் பணி செய்தாலும் அதில் முழு ஈடுபாடு செலுத்த வேண்டும் என்றார் அவர்.

**ஒரே ராக்கெட்டை பலமுறை பயன்படுத்த ஆய்வு:** திருவனந்தபுரம் திரவ உந்து சக்தி மைய இயக்குநர் வி.நாராயணன் பேசியதாவது:

642 டன் எடை கொண்ட எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் ஏவப்பட்டது. பூமியில் இருந்து 3.70 லட்சம் கி.மீ. பயணித்து, நிலவின் தென் துருவப் பகுதியில் திட்டமிட்டபடி தரையிறக்கப்பட்டது.

'எல்விஎம்- 3' ராக்கெட்டின் திறனை 4,000 கிலோவில் இருந்து கூடுதலாக 25 சதவீதம் அதிகரிக்கும் திட்டம் உள்ளது. இப்போது 9,000 கிலோ எடை கொண்ட கருவிகளைத்தான் ராக்கெட் எடுத்துச் செல்ல முடியும். 19,000 கிலோ எடை கொண்ட கருவிகளை எடுத்துச் செல்லும் வகையில் சக்திவாய்ந்த ராக்கெட்டுகளை தயாரிக்கத் தொடங்கியுள்ளோம்.

இப்போதுள்ள ராக்கெட்டுகள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளன. அப்படி இல்லாமல் மீண்டும் மீண்டும் அவற்றை பயன்படுத்தக் கூடிய வகையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்றார் அவர்.

## 5ஜி இணைய சேவை

# சர்வதேச இணைய வேக தரவரிசையில் 47–ஆவது இடத்துக்கு முன்னேறிய இந்தியா !

**புது தில்லி, அக். 2:** இந்தியாவில் 5ஜி இணையசேவை அறிமுகப்படுத்தப்பட்டதன் எதிரொலியாக உலகளாவிய இணையவேக பரிசோதனை குறியீட்டில் இந்தியா 47–ஆவது இடத்துக்கு முன்னேறியிருப்பதாக இணைய வேக பரிசோதனை தளமான 'ஒக்லா' தெரிவித்துள்ளது.

இந்தியாவில் ஜியோ மற்றும் ஏர்டெல் நிறுவனங்களால் 5ஜி இணையசேவை அறிமுகப்படுத்தப்பட்டன. 5ஜி சேவை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து இந்தியாவின் இணைய வேக செயல்திறன் 3.59 மடங்கு அதிகரித்துள்ளது. கடந்தாண்டு செப்டம்பரில் விநாடிக்கு 13.87 எம்.பி.யாக ஆக இருந்த சராசரி பதிவிறக்க வேகம் கடந்த ஆகஸ்டு மாதத்தில் விநாடிக்கு 50.21 எம்.பி.யாக உயர்ந்துள்ளது.

இதன்மூலம், உலகளாவிய இணையவேக பரிசோதனை குறியீட்டில் (ஸ்பீட்டெஸ்ட் குளோபல் இண்டெக்ஸ்) 119–ஆவது இடத்திலிருந்த இந்தியா 72 இடங்கள் முன்னேறி 47–ஆவது இடத்துக்கு வந்துள்ளது. வங்கதேசம், இலங்கை, பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளை இந்தியா இந்தப் பட்டியலில் முந்தியுள்ளது.

மற்ற ஜி20 நாடுகளான மெக்சிகோ 90–ஆவது இடத்திலும், துருக்கி 68–ஆவது இடத்திலும், பிரிட்டன் 62–ஆவது இடத்திலும், ஜப்பான் 58–ஆவது இடத்திலும், பிரேசில் 50–ஆவது இடத்திலும், தென்னாப்பிரிக்கா 48–ஆவது இடத்திலும் உள்ளன.

இதுதொடர்பாக ஒக்லா வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்திய தொலைத்தொடர்பு நிறுவனங்களின் 5ஜி சேவைக்கான சந்தாதாரர்கள் கணிசமாக அதிகரித்துள்ளனர். 5ஜி சேவையானது வேகமான இணையவசதியை மட்டுமின்றி வாடிக்கையாளர்களுக்கு அதிக திருப்தியையும் தருகிறது.

அனைத்துதொலைத்தொடர்பு வட்டங்களிலும் பயனர்களின் ஒட்டுமொத்த அனுபவத்தை 5ஜி சேவை மேம்படுத்தியுள்ளது.

4ஜி சேவை பயனர்களை ஒப்பிடும்போது 5ஜி சேவை பயனர்கள் தங்கள் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு மிகவும் சாதகமாக மதிப்பீடுகளை வழங்குகின்றனர். ஃபைபர் கேபிள்களைப் பதித்து பிராட்பேண்ட் இணைப்பை வழங்க சாத்தியமில்லாத அல்லது செலவு அதிகமாகும் பகுதிகளில் 5ஜி சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய மாணவர்களுக்கு மலிவு விலையில் 'க்ரோம்புக்' மடிக்கணினி

## சுந்தர் பிச்சை தகவல்

**புது தில்லி, அக். 2:** ஹெச்பி நிறுவனத்துடன் இணைந்து கூகுள் 'க்ரோம்புக்' மடிக்கணினியை இந்தியாவில் தயாரிக்கப்போவதை அறிவித்த கூகுள் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, 'இந்திய மாணவர்களுக்கு மலிவு மற்றும் பாதுகாப்பு கணினி அனுபவம் மேலும் எளிதில் கிடைக்கும்' என்றார்.

தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள 'ஃப்ளெக்ஸ்' தொழிற்சாலை வளாகத்தில், கடந்த 2020–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் ஹெச்பி நிறுவனத்தின் மடிக்கணினிகள், மேசைக் கணிப்பொறிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கூகுளின் பிரத்யேக இயங்குதளம் (ஓ.எஸ்.) கொண்ட இலகுரக மடிக்கணினியான 'க்ரோம்புக்' தயாரிப்பை இந்த தொழிற்சாலையில் மேற்கொள்ள ஹெச்பி நிறுவனத்துடன் கூகுள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'இந்தியாவில் கூகுள் க்ரோம்புக் இலகுரக மடிக்கணினியைத் தயாரிப்பதற்கு ஹெச்பி நிறுவனத்துடன் இணைந்துள்ளோம். இந்தியாவில் முதல் முறையாக கூகுள் க்ரோம்புக் தயாரிக்கப்படுகிறது.

இதன்மூலம், இந்திய மாணவர்களுக்கு மலிவு மற்றும் பாதுகாப்பான கணினி அனுபவம் மேலும் எளிதாக கிடைக்கும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஹெச்பி நிறுவன செய்திதொடர்பாளரும் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

கூகுள் மற்றும் ஹெச்பியின் கூட்டு அறிக்கையில், 'உலகம் முழுவதும் 5 கோடிக்கும் அதிகமான பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவிப்புரிந்து முன்னணி சாதனமாக க்ரோம்புக் திகழ்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி இயங்குதளம் கொண்ட மற்ற நிறுவனங்களின் இலகுரக மடிக்கணினிகளுடன் (நோட்புக்) ஒப்பிடும்போது கூகுளின் க்ரோம்புக் குறைந்த விலையில் விற்பனையாகிறது.

புதிய கூகுள் க்ரோம்புக் ஒன்று தற்போது ரூ.15,990 வரையிலான விலையில் கிடைக்கின்றது. இந்தியாவிலேயே க்ரோம்புக் தயாரிக்கப்படும் சூழலில், அதன்விலை மேலும் குறையும் எனக் கருதப்படுகிறது.